விலை: சதம் 75

டில்கா
வாச் வேக்ஸ்
Dilka Watch Works
யாழ் நகரில் சகல மணிக்கூடுகளையும்
திருத்தவும் புதிதாக வாங்கவும்
விஜயம் செய்யுங்கள்.
டில்கா வாச் வேக்ஸ்
பஸ் நிலைய எதிர் மேல் மாடி
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி; 8174

ஈழநாடு
THE EELANADU
மலர் 23 ஆடி 7 றம்ழான் 19 இதழ் 158
யாழ்ப்பாணம் புதன்கிழமை 22-7-1981

யாழ்.நகரில்
சிக்மா பம்ப்ஸ்
அதிகளவு விற்பனை புரிபவர்கள்
தொலைபேசி : 508
ராம்சன்ஸ்
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
19, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

யாழ். வன்செயல் சம்பவங்கள்

# 3 கோடி ரூபா நஷ்டஈடு

# உடனடியாக வழங்குக

## ஜனாதிபதிக்கு யோகேந்திரா கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம்பெற்ற வன்செயல்களினால் ஏற்பட்ட சேதத்தை ஈடுசெய்யும் பொருட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக 3 கோடி ரூபா நஷ்ட ஈடு வழங்குக.

இவ்வாறு திரு. யோகேந்திரா துரைசுவாமி ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். அரசாங்க அதிபராகவும் யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளராகவும் பதவி வகித்த திரு. யோகேந்திரா துரைசுவாமி தமது பதவிப் பொறுப்புக்களைக் கடந்த வார இறுதியில் திரு. தேவநேசன் நேசையாவிடம் ஒப்படைக்குமுன்னர் இக்கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பினார்.

திரு. யோகேந்திரா தமது முன்னைய பதவிக்காலத்தில் மேற்கொண்ட கடைசிப் பணி இதுவாகும்.

யாழ் வன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவது பற்றி ஆராயும் பொருட்டு திரு. யோகேந்திராதுரைசுவாமியின் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தின் உயரதிகாரிகளை உள்ளடக்கிய குழு நியமிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் நிகழ்ந்த சேதங்கள்பற்றி உதவி அரசாங்க அதிபர்கள், பாதிக்கப்பட்டவர்களோடு தொடர்பு கொண்டு. அரசாங்க அதிபருக்கு சமர்ப்பித்த அறிக்கைகளை அடிப்படையாகவைத்து ஏற்பட்ட சேதங்கள் பற்றி

[6-ம் பக்கம் பார்க்க]

## புதிய பதவி

[யாழ்ப்பாணம்]

திரு. யோகேந்திரா துரைசுவாமிக்கு விரைவில் புதிய பதவி வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாநில இணைப்பு அதிகாரியாக திரு. யோகேந்திரா துரைசுவாமி நியமிக்கப்படலாமெனத் தெரிய வருகிறது.

## ஜனாதிபதியை சந்திக்கவில்லை

[கொழும்பு]

சட்டப்படி வேலைசெய்யும் இயக்கத்தை மேற்கொண்டு வரும் ஐக்கிய தாதிமார் சங்கத் தலைவர் ஆனந்த முத்தெட்டுவேகம தேரோ தம்மைச்சந்திக்கும் தாதிமார்பிரதிநிதிகள் குழுவில் அங்கம் வகிப்பதை ஜனாதி

[6-ம் பக்கம் பார்க்கவும்]

## பஸ்ஸில் கொள்ளை:

## 3 இளைஞர்கள் கைவரிசை!

[யாழ்ப்பாணம்]

ஓடிக்கொண்டிருந்த பஸ்ஸில் மூன்று இளைஞர்கள் துப்பாக்கியைக் காட்டி, நடத்துனர் வி. சுப்பிரமணியத்திடமிருந்த பணம் முழுவதையும் கொள்ளையடித்த சம்பவம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் நிகழ்ந்தபோது சிவில் உடையில் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிளும், வடபிராந்திய போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவரும் சுமார் பதினொரு பிரயாணிகளும் இந்தப் பஸ்ஸில் இருந்தனராம்.

கேரதீவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த வடபிராந்திய போக்குவரத்து சபையைச் சேர்ந்த

[6 ... பார்க்க]

ஹோம் பினன்ஸ்

82,கன்னாதிட்டி,(போன்: 8310)யாழ்ப்பாணம்.
ரூபா-1000-க்கு மேற்பட்ட ஒருவருட வைப்பிற்கு ஆகக்கூடுதலான வட்டியை வழங்குகிறது.

வருடம் 30 % வட்டியை

வருட முடிவில் வழங்கும்
அல்லது

வருடம் 28 % வட்டியை

மாதாமாதம் வழங்கும்.
இடைப்பட்ட காலத்தில் வைப்புப் பணத்தை மீளப்பெறுவோர்க்கு எதுவித வட்டிக் கழிவும் செய்யப்படமாட்டாது.
உங்கள் பணத்தை விவேகமாக முதலீடுசெய்யுங்கள்.
தலைமையகம்: 463, காலி வீதி, கொழும்பு-3
தொலைபேசி: 89190

# பொலிஸார் எச்சரித்தனராம்!

## பொலிஸ் அதிபரிடம் யாழ். எம். பி. புகார்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திக்கு முன்னால் யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரனை அவ்விடத்தில் கடமையாற்றிய ஆயுதம் தாங்கிய 3 பொலிஸார் எச்சரித்ததாக யாழ். பொலிஸ் அதிபர் திரு. மஹத்திற்கு யாழ். எம். பி. புகார் செய்துள்ளார்.

இச்சம்பவம் பற்றி உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகப் பொலிஸ் அதிபர் யாழ் எம் பிக்கு உறுதியளித்தார்.

யாழ் எம் பி திரு யோகேஸ்வரன் நேற்றுக் காலை காரில் வந்து கொண்டிருந்தபோது, ஆஸ்பத்திரிக்கு முன்பாகக் கார் பழுதடையவே, அங்கு நின்ற இளைஞர்கள் காரைத் தள்ளி 'ஸ்ராட்' செய்தனர் என்றும், எம் பி கையைக் காட்டி நன்றி தெரிவித்துவிட்டுச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

சில நிமிடத்தில் மீண்டும்

[6ம் பக்கம் பார்க்க]

யாழ். அபிவிருத்திசபை உறுப்பினர்கள்

# வழக்கு முடிந்த பின்னர் மாற்றம் செய்யப்படுவர்

## அமிர் அறிக்கை

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட அபிவிருத்திச சபைத் தேர்தலை ஆட்சேபித்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு முடிவடைந்தபின் யாழ் மாவட்டசபை உறுப்பினர்கள் விகிதாசாரப்படி மாற்றம்செய்யப்படுவார்கள்.

கிளிநொச்சியைச் சேர்ந்த திரு. இ. கிருஷ்ணராசாவை மாவட்டசபை உறுப்பினராக்குமாறு கிளிநொச்சி தொகுதி கூட்டணி உறுப்பினரினதும் கிளைகளினதும் கோரிக்கை தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகமும். எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொகுதி ரீதியாகக்கிடைத்த வாக்குகளின் விகிதாசாரப்படி யாழ். மாவட்டசபை கூட்டணிப் பட்டியலை கூட்டணி நியமனக்குழு தேர்தல் ஆட்சேப வழக்கு முடிவடைந்த பின்னர் மாற்றியமைக்கும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அண்மையில் நடந்த கூட்டணிப் பொதுச்சபைக் கூட்டத்திலும், யாழ் மாவட்ட சபை உறுப்பினர்கள் கூட்

[6-ம் பக்கம் பார்க்க]

**மணிவாக்கு**

விளக்குக் கண்ணாடி (Chimney) புகை பிடித்திருந்தால் வெளிச்சம் எப்படித் தெரியும்? மனம் அழுக்கடைந்திருந்தால் ஆன்மாவின் ஒளி எப்படித் தெரியும்?
—யோக சுவாமிகள்

# நமது நோக்கு

## பழைய சமுதாயத்திற்கு புதிய சவால்

மாவட்ட ஆட்சிபெறுமென்ன, மாநில ஆட்சி பெறுமென்ன, ஆட்சி முறை பற்றி தொடர்ந்து ஆராய்ச்சி செய்தலை தந்திரமாகவாவது நிறுத்தி வைத்தல் நலம்.

தமிழ்மக்கள் எங்குவாழ்ந்தாலும் ஒரு இனத்தவர்; ஒரு பண்பாட்டைச்சேர்ந்தவர்கள். மொழி வெறி, மத வெறி, இன வெறியற்றவர்களென்பது வரலாறு காட்டும் பாடமாகும்.

இன்று உலகில் பல நாடுகளில்-எங்கள் நாடு உட்பட இவ்வித வெறிகளும் வேறுபாடுகளும் நாட்டின் அபிவிருத்தியைக் கெடுத்து வருகின்றன.

மிகப்பழமையான சமுதாயமென்ற பெயர்பெற்ற நம் எங்கள் குறைகளை நாமே உணர்ந்து செயற்படுவதற்கு காலம் வந்துவிட்டது.

பழைய கதைகளை வைத்துக்கொண்டு வேற்றுமைகளைக் கற்பித்துக்கொள்வதை விடுவோம், எங்கள் பழைய சரித்திரத்தை சரியான பிரமாணங்களைக் கொண்டு ஆராய்ச்சிசெய்வது முடியாத காரியம். அவசியமும் இல்லை.

குடி, கோத்திரம், குலம் என்ற பதங்களுக்கு மிகக் குறுகிய கருத்துக்களை வழங்குவது எங்கள் சமுதாயத்தின் சாபக்கேடு என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஒரு தமிழன், இன்னொரு தமிழனை முதன்முதல் சந்திக்க நேரிட்டால், வெளிப்படையாகவோ அல்லது இரகசியமாகவோ என்ன "சாதியானோ" என்று அறியவேண்டும் மனப்பான்மை கொண்டிருக்கும் வழக்கம் 21ம் நூற்றாண்டிலும் தொடருமோ என்று அஞ்சவேண்டியிருக்கிறது.

இன்று நாம் அரசியல் ரீதியில் மட்டுமல்ல, சமுதாயரீதியிலும் பல நல்ல மாற்றங்களை உருவாக்கிக்கொண்டிருக்கின்றோம். எனவே நாம் முன்வைத்து வரும் அடியை, எதுநேரிட்டாலும் பின்வைக்கக் கூடாதென உறுதிகொள்ள வேண்டும்.

யாழ்ப்பாண மாவட்டம் அபிவிருத்தியில் முன்மாதிரியாக விளங்க ஏனைய மாவட்டங்களுக்கு வழிகாட்ட சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

மட்டக்களப்பு தொடக்கம் மன்னார் வரைக்கும் அபிவிருத்தித் திட்டங்கள் துரிதப்படுவதற்கு நிதியல்ல முக்கியம். அரசின் ஆதரவுமல்ல. இவைதேவைதான்: ஆனால் முதன்மையானது பொது மக்கள் ஒத்துழைப்பு. இந்த ஒத்துழைப்பு மக்கள் பண்பாட்டில் உயிர்த்துடிப்பு பெறுகின்றது. இது வேறெந்த சமுதாயத்திற்கும் மாறுபட்டதல்ல வென்பது தமிழ்ப்பண்பின் தனிச்சிறப்பு.

சமுதாயம் என்று நாம் குறிப்பிடுவது ஆங்கிலத்தில் "கம்யூனிட்டி" என்று சொல்வதாகப் பொருள் கொள்ளவேண்டும்

வள்ளுவர் 'குடி' பற்றிச் சொல்வதெல்லாம் தனிக் குடும்பத்தையல்ல; 'கம்யூனிட்டி' பற்றியே!

இன்று அமுலுக்கு வரும் புதுமுறை உள்ளூராட்சியில் நாம் எமது கடமையை உணர்வதற்கு முனிவரின் முதுமொழி நற்பயனளிக்கும்.

குடி செய்வல் என்னும்
ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத்தான்
முந்து உறும்

தான் பிறந்த சமுதாயத்தை உயரச் செய்வேன் என்று ஒருவன் உறுதி செய்து அதற்கு ஏற்ற கருமங்களில் முயல்வானாயின் தெய்வம் ஆடையை இறுக உடுத்திக்கொண்டு தொழில் செய்பவர் போல், அவனுடைய சுகநலத்தை அதுவே கவனிக்கும்.

எந்தச் சமுதாயத்தை உதாரணமாக எடுத்தாலும் இந்த உண்மை எளிதில் புலப்படும்.

எச்சரிக்கையும் முனிவர் தந்துதவியிருக்கிறார்; இன்று எங்கள் சமுதாயத்திற்கு இதனைவிடப் பொருத்தமானது வேறு எதுவுமில்லை.

இடுக்கண் கால்கொன்
றிட வீழும்
அடுத்து ஊன்றும்
நல்ஆள் இல்லாத குடி

வெட்டப்பட்ட மரம் தாங்கு கொடுக்காமற் போனால் வீழ்ந்து போவது போல், சமுதாயத்துக்குத் துன்பம் வந்த போது, தைரியமும் ஆற்றலும் கொண்டு சேவை செய்யக்கூடிய வீரர்கள் நின்று தாங்காமற் போனால் அந்தச் சமுதாயம் அழிந்துவிடும்.

யாழ் (பழமை வாய்ந்த சமுதாயம் பழங் கதைகளைக் கைவிட்டு புதிய சவாலை ஏற்று உன்னுடைய தீரத்தைக் காட்ட முன்வருவாயாக!

## இன்றைய எமது முக்கிய கடமை

யாழ். நகரில் இருந்து பல வருடங்களாக எத்தனையோ கிராமங்களுக்கு நடுவில் தொடர்ந்து வெளிவரும் ஒரே தினசரி எங்கள் 'ஈழநாடு' பத்திரிகை. கொடியோரின் பலத்த தாக்குதலுக்குப்பின்னர் வெளிவருமோ என்று எண்ணிக் கலங்கி வேதனையுற்ற போது எத்தனை இடர்ப்பாடுகள் வரினும் 'எம் கடன் பணி செய்து கிடப்பதே' என்பதற்கமைய

## மக்கள் கருத்து

தன்னைவிடப் பலமடங்கு கூடாகவும், சுவையாகவும், பலரையும் படிக்கத் தூண்டும் வகையில் நமது நோக்கு, இப்படியும் நடக்கிறது, நாடும் நடப்பும், அரசியல் கருத்துக்கள், மணிவாக்குகளுடன் வெளிவந்தது எல்லோரையும் மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்திவிட்டது.

'ஈழநாடு' புத்தொளிபெற வர்த்தகப் பெருமக்கள் விளம்பரம் கொடுத்து உதவியும், தமிழ்மக்கள் ஒவ்வொருவரும் 'ஈழநாடு' ஆயுள் சந்தாதாரராகியும் ஆதரவு கொடுக்க வேண்டியது இன்றுள்ள முக்கிய கடமை.

மு. நம்பித்துரை
கே. கே. எஸ். ரோட்,
கீரிமலை.

## அஞ்சுவதுமில்லை - அஞ்சவருவதுமில்லை
# நல்வழிகாட்டும் ஆளுடைபிள்ளையின் அருட் பதிகங்கள்

வை.ஏரம்பமூர்த்தி

வயது முதிர்ந்த ஒரு பெரியவர் என்னைச் சந்திக்க வந்தார். பழுத்த சைவப் பழம் அவர். அவர் வந்து என்னிடம் கேட்ட சில விஷயங்களை நமது யாழ்ப்பாணத்துச் சைவமக்களிடமும் கேட்கலாம் என்ற நோக்கத்தோடு இதனை எழுதுகிறேன்.

"உங்கள் வீடுகளிலே சுவாமி அறையென ஒன்று அல்லது சுவாமிபடங்களை வைத்து விளக்கேற்றி வணங்கிவரக் கூடிய இடம் ஒன்று அமைத்திருப்பீர்கள்தானே. அந்தச் சுவாமிபடங்களுக்குத் தூப தீபம்காட்டி நாள்தோறும் நீங்கள் வழிபடுவதுண்டா? உங்களில் எத்தனைபேர் காலையிலோ மாலையிலோ- முக்கியமாக மாலையில்- அப்படங்களின் முன்னுலமர்ந்து தேவார திருவாசகப் பாடல்களை ஓதுவீர்கள் நமது நாயன்மார் பாடி அருளிய தேவார திருவாசகப் பதிகங்களில் ஒவ்வொருபதிகத்தையும் முற்று முழுதாக ஓதிவரும் வழக்கத்தை உடையவர்கள் உங்களில் எத்தபேர்?

"வீட்டிலே தாய் தகப்பன் பிள்ளைகள் எல்லோருமாகச் சேர்ந்து மாதந்தோறும் ஒவ்வொரு தேவாரப்பதிகம் என்ற நியதிப்படி ஓதுபவர்கள் உங்களில் எத்தனைபேர் இருக்கிறீர்கள், ஆமாம் குழந்தை குட்டிகள் எல்லாம் சேர்ந்து ஓதவேண்டும். அப்படிச் செய்கிறீர்களா?

"சென்ற 31-5-81 விருந்து 'செய்யனே திரு ஆலவாய்.....' என்று தொடங்கும் ஞானசம்பந்தப் பெருமானுடைய தேவாரப் பதிகத்தில் உள்ள பதினொரு பாடலையும் நாள்தோறும் ஒரு மாதகாலத்திற்காவது இடையீடுபடாமல் ஓதிவருபவர்கள் உங்களில் எத்தனைபேர் இருக்கிறீர்கள்!

"திருஞானசம்பந்தப் பெருமான் நமக்காக அவதரித்தவர். அவருடைய அவதார நோக்கம் என்ன என்பதை அறிந்திருக்கிறீர்களா?

"அரசியல் போராட்டமாக உண்ணாவிரதங்களையும்- உண்ணாவிரதம் என்ற ஆமாம் புனிதமான பதத்தைக்கூட உபயோகிக்க அருவருப்புப் பட்டுக்கறப் போர்என்றுபோரி பட்டம் கட்டி நடத்துங்கள்: மேடைப்பேச்சுக்களைக் காரசாரமாகப் பேசுங்கள் [பாரதி சிரிக்கப்போகிறார்] சிவாயநம ஓம்- ஓம் நமசிவாய என்று இப்படியும் அப்படியுமாகத் தலைகீழாகவும் தலைமேலாகவும் தாளம் தட்டுங்கள். காலைப் பிடித்தேன் கையைப் பிடித்தேன் வா வா ஓடிவா என்று குதித்துக் கூத்தாடுங்கள் வேறு மந்திரங்களையெல்லாம் காற்றிலே (மைக்கிலே) பறக்க விடுங்கள். மந்திரம் சொல்ல ஆயத்தப்படுகிற ஐயருமல்லவா லவுட்ஸ்பீக்கர் காரன் எங்கே என்று அங்குமிங்கும் பார்க்கிறார். இவையெல்லாவற்றையும் செய்யுங்கள், நான் வேண்டாமென்று சொல்லவில்லை.

இதுகூட பாவம்

"நமது நாடும் நமது தலைவர்களும் போகிற போக்கைப் பார்த்தால் நமக்கெல்லாம் இருள் சூழ்ந்த ஒருகாலம் வந்து சேரப்போகிறது போலவே தோன்றுகின்றது. ஆதலால் நமக்கெல்லாம் வழிகாட்டியாக வந்தவரும் உமாதேவியாரிடமே ஞானப்பால் பருகியவரும் வயதிலேதேவாரம் பாடி நமக்கெல்லாம் குருநாதனாகத் திகழ்ந்த ஞானசம்பந்தப்பெருமான் இன்றும் எங்களுக்கு நல்வழி காட்டுவான்; எங்களைக் காத்தருளுவான் என்ற நம்பிக்கை உங்களிடமிருந்தால்......

"இன்றே ஆரம்பியுங்கள்! வீட்டுக்கு வீடு கூட்டுப்பிரார்த்தனை! அப்பெருமானது பதிகங்கள்தோறும் காணப்படும் கடைசி நான்கு பாடல்களிலும் உள்ள கருத்தினை நன்கு தெளிவுறுங்கள். பாடல்களின் கருத்தறிந்து பாராயணம் செய்யுங்கள்.

"சுவாமியை வணங்கிறேன், விரதமிருக்கிறேன், வீட்டிலே எல்லோருமாகச் சேர்ந்து கூட்டுப்பிரார்த்தனை செய்கிறேன், பூசைபண்ணுகிறேன். அபிஷேகம் செய்விக்கிறேன் என்றெல்லாம் வெளியிலே சொல்வது- பிரசாரம் செய்வது கூடப் பாவம்! அது ஆணவ முனைப்பைத் தூண்டுகிற ஒரு செயல். வீட்டுக்குள்ளே மனைவி மக்கள் குழந்தை குட்டிகளோடு சேர்ந்து வெளியார் எவருக்கும் பிரசித்தப்படுத்தாமல் உங்கள் பாட்டிலேயே நம்பிக்கையோடு பிரார்த்தனையை ஆரம்பியுங்கள்!

"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்கத் தமது புனித வாயால் மலர்ந்து அழுத ஆளுடையபிள்ளை நமக்கும் நல்வழி காட்டும். மாதம் ஒரு பதிகம் என்ற முறையில் நாள்தோறும் ஓதி வாருங்கள் பதிகங்கள் உங்கள் எல்லோர்க்கும் - இளஞ்சிறுசுகளுக்கும் கூட மனப்பாடமாகிவிடும். ஓராண்டுக் காலத்துக்குப் பன்னிரண்டு பதிகம் என்ற முறையிலே கணக்குப்போட்டால் உங்கள் வாழ்நாள் முழுவதும் படிக்கவும் அதற்கு மேலும் படிக்கவும் ஞானசம்பந்தப் பெருமான் பாடல்களைப்பாடி வைத்திருக்கிறார்.

"இந்த வழக்கத்தைக் கொண்டு வெளிவேஷமான சமயச் சடங்குகளைத் தவிர்த்தீர்களானால் இறைவன் நமது வீடுகளிலேயே வந்து திருநடனம்புரிய ஆரம்பித்துவிடுவான். அவனுடைய குஞ்சித பாதத்தின் சதங்கை ஒலி கூட உங்களுக்குக் கேட்கும். அவனடியவர்கள் நாம் அஞ்சுவதும் இல்லை. அஞ்சவருவதும் இல்லை என்ற மனத்திண்மை உங்களுக்கே ஏற்படுவதை நீங்கள் உணர்வீர்கள்.

"இப்படியான வழக்கத்தை இடையறாதுகைக் கொண்டொழுகுபவர் யாராவது இருந்தால் எனக்குச் சொல்லுங்கள். நான் அவர்களுடைய வீடுதேடிச் சென்று அவர்களுடைய காலிலிருந்து வணங்க வேண்டும்."

இவ்வாறாக அந்த முதியவர் ஒரு குட்டிப் பிரசங்கம் செய்தார். இப்பிரசங்கத்திலே ஏதாவது உண்மை இருந்தால் சாரம் இருந்தால் அது நமக்கெல்லாம் பயன்படட்டுமே என்று இங்கே தந்திருக்கிறேன். பெரியவரும் நீங்களும் இனிப் பட்டதுபாடு, நான் விலகிக் கொள்கிறேன்.

## சன்சோனிக் கமிஷன் நஷ்டஈடு

[கொழும்பு]

1977 ஆகஸ்ட், செப்டம்பர் இனக்கலவரங்களின்போது பாதிக்கப்பட்டவர்களுக்குச் சன்சோனிக்கமிஷன் சிபார்சின்படி நஷ்டஈடு வழங்குமாறு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன சமூகசேவை அமைச்சுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த நஷ்டஈட்டுக்கான விண்ணப்பங்களைக் கோருமாறும் உடனடியாக நஷ்டஈடு வழங்கவேண்டுமென்றும் சமூகசேவைகள் அமைச்சு பணிக்கப்பட்டுள்ளது. (து).

## நாடும் நடப்பும்

ஒரு சபையின் அந்தஸ்தும் கௌரவமும் அமைப்புமிருந்தால் தான் எடுப்பாக இருக்கும் என்பது மாவட்ட அபிவிருத்திச்சபையின் முதலாவது கூட்டம் எடுத்துக்காட்டியிருக்கிறது. மாவட்ட அபிவிருத்திச் சபை ஒரு குட்டிப் பாராளுமன்றமாகவே கருதப் படுகிறது. பாராளுமன்றத்திலுள்ள சம்பிரதாய முறைகளும் இங்கே பின்பற்றப் படுகின்றன. பாராளுமன்றத்தினுள் நுழைபவர்கள் பயபக்தியுடன் நுழைகின்றனர். சம்பிரதாயங்களை மட்டுமல்ல, பாராளுமன்றத்தில் ஆசனங்கள் மற்றும் ஏற்படுத்தப்பட்டுள்ள அமைப்பும் இதற்கு முக்கிய காரணம். மாநகரசபை மன்றம், நகரசபைகளின் கூட்டங்களும் அதற்கேற்ற ஆசன அமைப்பு முறையில் நடைபெறுவதால் அங்கும் ஒருவித ஒழுங்கும் முறையும் பின்பற்றப்படுகின்றன.

மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டங்கள் நடைபெறும் கச்சேரிகளில் அதேரீதியில் உள்ளூராட்சிச்சபைகளைவிட உயர்ந்த அந்தஸ்திலுள்ள மாவட்ட அபிவிருத்திச்சபையின் முதலாவது கூட்டம் கச்சேரியில் நடைபெற்றபோது ஒழுங்கு விதிமுறைகளைத் தலைவர்தான் எடுத்துக்காட்டவேண்டியிருந்தது. யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவர் பாராளுமன்றசம்பிரதாயத்தில் அனுபவமுள்ளவர்மட்டுமல்ல ஆற்றலும் நிறைந்தவர். அவரது மிடுக்கான குரல் சபையின் முதல் கூட்டத்தைச் சரியான முறையில் நடத்துவதற்கு வழிகாட்டியது!

ஆனாலும் மாவட்ட அபிவிருத்திச்சபைகளின் கூட்டங்கள் நடத்துவதற்கு ஏற்ற அமைப்பில் புதிய கட்டிடம் ஒன்று நிறுவவேண்டியது அவசியம்தான்!

0 0 0

மிருதங்கவித்துவான் நாச்சிமார்கோயிலடி அம்பலவாணரின் திடீர் மறைவு இசையுலகிலுள்ளவர்களுக்குமட்டுமல்ல அவருடன் சில நாள் பழகியவர்களுக்கும் அதிர்ச்சியளித்திருக்கும்.

அமைதியும் அடக்கமும் தாராளசிந்தையும் கொண்டவர் அம்பலவாணர். ஒரு மாணவனிடம் திறமை இருப்பதை அறிந்துகொண்டதும் அவனை எப்படியாவது முன்னுக்குக் கொண்டுவந்துவிட வேண்டுமென்ற துடிப்புள்ளவர். வசதி குறைந்த பல மாணவர்களை தனது கஷ்டநஷ்டங்களையும் பொருட்படுத்தாமல் முன்னுக்குக் கொண்டு வந்தவர்.

அம்பலவாணரின் மறைவு ஈழத்து இசையுலகுக்கு ஒரு பேரிழப்பு. அவரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதை விட வேறு நாம் என்னதான் செய்ய முடியும்?

0 0 0

ஜேர்மன் சென்ற இளைஞர்களில் ஒருவர் முந்தாநாள் வீடு வந்து சேர்ந்தார். அவர் திரும்பிவருவார் என்று பெற்றோர் எதிர்பார்த்தே அவரை

[5ம் பக்கம் பார்க்க]

# "யாழ். வன்செயல்கள்: அரசாங்கமே பொறுப்பு"

## பாலாதம்பு கண்டனம்

(கொழும்பு)

"யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்ற வன்செயல் சம்பவங்களுக்கு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் அவரது அரசாங்கமுமே முழுப் பொறுப்பு. இனபேதம் நம் தொழிலாளர் வர்க்கத்தின் சத்ரு இதுவே."

இவ்வாறு இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத் தலைவர் திரு. பாலாதம்பு கூறினார்.

கொள்ளுப்பிட்டியில் உள்ள மேற்படி சங்கக் கட்டிடத்தில் தொழிலாள வர்க்கத்தின் நலனுக்காக மாபெரும் கட்சி ஒன்றை அமைப்பதற்கான ஆலோசனைக் கூட்டத்தில் பேசுகையில் திரு. பாலாதம்பு மேலும் கூறியதாவது:-

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சம்பவங்களுக்கு தானே பொறுப்பேற்க வேண்டும் என்று அமைச்சர் திரு. காமினி ஜயசூரிய கூறியுள்ளார். இதே வேளையில் முன்னாள் சட்டமா அதிபர் ஜனாப் அமீர் தலைமையிலான குழு ஒன்று யாழ். வன்செயல்கள் பற்றி விசாரணை நடத்த இருக்கின்றது. ஐக்கிய தேசியக் கட்சி அரசினால் முன்பு சட்டமா அதிபர் பதவியில் அமர்த்தப்பட்ட அதாவது முழுக்க முழுக்க ஐக்கிய தேசியக் கட்சிக்காரரான ஜனாப் அமீரின் தலைமையிலான குழுவினால் நடத்தப்படும் விசாரணையில் எவ்வாறு நியாயம் கிடைக்க முடியும்.

### அமிருக்கு உரிமை இல்லை

தமிழ் மக்கள் சார்பில் பாராளுமன்றத்தில் 5 அம்சக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் கூறுகிறார். நாடு முழுவதிலும் உள்ள தமிழ் மக்களின் சார்பில் பேச திரு. அமிர்தலிங்கத்திற்கு உரிமை கிடையாது. ஒரு பகுதி தமிழ் மக்கள் சார்பில் வேண்டுமானால் அவர்கள் பேசலாம்.

### யாழ்ப்பாணத்தில் கூட பாதுகாப்பு இல்லை

77-ம் ஆண்டு தென்னிலங்கையில் இனக்கலவரங்களினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் கோவில்களில் அகதிகளாக இருந்து கப்பல்கள் மூலம் யாழ்ப்பாணம் சென்றனர். இம்முறை இடம்பெற்ற சம்பவங்கள் தமிழ் மக்களுக்கு யாழ்ப்பாணத்தில்கூட பாதுகாப்பு இல்லை என்பதை எடுத்துக்காட்டிவிட்டது.

### சிறில் மத்யூ ஜே. ஆரின் மற்றொரு குரல்

அமைச்சர் திரு. சிறில் மத்யூ தமக்குத் தெரியாத விஷயங்கள் பற்றிப் பேசுகிறார் என கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் கூறியுள்ளார். அவர் தெரியாத விஷயங்கள் பற்றிக் கூறவில்லை. திரு. ஜெயவர்த்தனவின் மற்றொரு குரலாகவே திரு. மத்யூ ஒலித்து வருகிறார். ஜே. ஆர். தலைமையிலான இலங்கை அமைச்சரவையின் ஒவ்வொரு அமைச்சர்களும் ஒவ்வொரு இசைக்கருவிகளை வாசிக்கிறார்கள். இவற்றுக்கெல்லாம் தலைவர் திரு. ஜெயவர்த்தனா என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

ஐ. தே. கவைப் பார்த்த கூட்டணியினரின் முகத்திக் காயம் பட்டதும் சுதந்திரக் கட்சியை இடபோது அவர்கள் நாடியுள்ளனர்.

1961-ம் ஆண்டு யாழ். கச்சேரி முன் அமைதியாக சத்தியாக்கிரகம் இருந்த தமிழ் மக்கள் மீது இராணுவத்தை ஏவிவிட்டு துப்பாக்கிகளாலும் குண்டாந்தடிகளாலும் தாக்குதல் நடந்தபோது திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் அரசே என்பதைக் கூட்டணியினரும் தமிழ் மக்களும் மறந்துவிடக்கூடாது.

அப்போது திரு. எட்மண்ட் சமரக்கொடி பாராளுமன்றத்தில் கேட்ட கேள்வி ஒன்றுக்கு சத்தியாக்கிரகத்தின் போது இராணுவத்தினர் தமது பெல்ட்டுகளினாலேயே சத்தியாக்கிரகிகளைத் தாக்கினர் என்றும் குண்டாந்தடிகளாலோ துப்பாக்கிகளினாலோ தாக்கவில்லை என்றும் கூறினார். இதனைக் கூட்டணியினர் மறந்துவிடக்கூடாது. (ம-இ)

## இந்திரா காங்கிரஸ் எதிர்த்தாலும் – ஆதரித்தாலும்

# அ.தி.மு.க. அரசை தி.மு.க. தொடர்ந்து எதிர்க்கும்

## கருணாநிதி அறிவிப்பு

சென்னை, ஜுலை 21

எக்காரணம் கொண்டும் இந்திரா காங்கிரஸ் தி. மு. க. வுடனான உறவை முறித்துக் கொள்ளாது என்று தி. மு. க. தலைவர் திரு மு கருணாநிதி கூறினார்.

தென்னாற்காட்டில் நடைபெற்ற கட்சியின் மாநாடு ஒன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தி. மு. க. வுடனான உறவை முறித்துக்கொள்ளும் நோக்கம் எதுவும் இந்திரா காங்கிரஸுக்கு கிடையாது என்றும் கூறிய திரு கருணாநிதி, எந்தக்கட்சி தி. மு. கவை எதிர்த்தாலும் ஆதரித்தாலும் தி. மு. க. தொடர்ந்தும் அ. தி. மு. அரசை எதிர்த்தே தீரும் என்றும் திரு கருணாநிதி கூறினார். (ஏ)

## கொழும்பு அபிவிருத்தி சபை:

# சுதந்திரக்கட்சி உறுப்பினர் கலந்துகொள்ளவில்லை!

(கொழும்பு)

கொழும்பு மாவட்ட அபிவிருத்தி சபையின் முதலாவது கூட்டத்தில் அம்மாவட்டத்தின் ஒரே ஒரு சுதந்திரக்கட்சி எம். பி யான ஜனாப் ஹலீம் இஷாக் [கொழும்பு மத்தி 2வது எம். பி.] கலந்து கொள்ளவில்லை.

இக்கூட்டம் நேற்று முன்தினம் காலை 10-45 மணிக்கு பௌத்த குருமாரின் பிரித்து ஓதும் வைபவத்துடன் ஆரம்பமாகியது.

சிங்கள மொழியில் கூட்டம் நடைபெற்ற இக்கூட்டத்தில் கொழும்பு மாவட்ட சபை உறுப்பினர்களும் இம்மாவட்டத்தைச்சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களும் கொழும்பு மேயர் திரு சிறிசேன கூரேயும் கலந்துகொண்டனர்.

உள்ளூராட்சி அமைச்சர் திரு ஆர். பிரேமதாசா இச்சபையில் உறுப்பினராக இருக்க முடியாதென்பதால் அவருக்குப் பதிலாக கொழும்பு மேயர் திரு. கூரே சபை உறுப்பினர்களில் ஒருவராகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

மாவட்டத்தின் உடனடித் தேவைக்காக 85 ஆயிரம் ரூபாவை ஒதுக்குவதென்றும் மாதத்தின் முதலாவது திங்கட்கிழமைகளில் சபைக் கூட்டத்தை நடத்துவதென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (இ)

## பனைஓலைப் பெட்டியில் தேயிலை

[மன்னார்]

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை பனை ஓலைப்பெட்டிகளில் அடைத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும்.

இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மன்னார் மாவட்ட பனம்பொருள் உற்பத்தியாளர் சங்கத் தலைவர் லாநிதி யோன் மார்க் பிரதேச அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் திரு. பி. ஜெகநாதனிடம் விடுத்த வேண்டுகோளையடுத்து இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## தற்கொலை

(பசிலைப்பள்ளி)

வர்த்தகத்தில் ஏற்பட்ட நட்டத்தினால் மனமுடைந்த, மூன்று பிள்ளைகளின் தந்தை நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

பளையைச் சேர்ந்த மு. குலசேகரம் (வயது 28) என்பவரே தற்கொலை செய்தவராவார். மரணவிசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி திரு என். தர்மேந்திரா நடத்தி தற்கொலை என்று தீர்ப்பளித்தார்.

## பதவி உயர்வு

[காங்கேசன்துறை]

சீமெந்துக் கூட்டுத்தாபனத்தில் கடந்த 31ஆண்டுகளாக பணியாற்றிய திரு. இ. சாது சிவாமணிப்பிள்ளை காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையின் விற்பனை முகாமையாளராகப் பதவியுயர்வுடன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவரின் கடந்த கால சேவைகளைப் பாராட்டி சீமெந்து கூட்டுத்தாபனத் தலைவர் நேரடியாகவே இந்த நியமனத்தை இவருக்கு வழங்கி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## புதிய விஞ்ஞான கூடம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் புதிய விஞ்ஞான ஆய்வுகூடக் கட்டிடமொன்று அமைப்பதற்காக 1 லட்ச ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

## புதிய அதிபர்

(வாழ்ப்பாணம்)

வேம்படி மகளிர் கல்லூரியின் புதிய அதிபராக திருமதி ஏ. இராஜசிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்னர் மானிப்பாய் மகளிர் கல்லூரியின் அதிபராக பதவி வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேலிய துருப்புகளின் மும்முனைத் தாக்குதல்!

பெய்ருத், ஜுலை 21

லெபனானின் தென்பகுதியிலுள்ள பலஸ்தீனிய நகரங்களை இஸ்ரேலிய துருப்புக்கள் நேற்று ஆகாய, தரை, கடல் மார்க்கமாகத் தாக்கியுள்ளன.

இஸ்ரேலின் வடபகுதி நகரங்களை பலஸ்தீனியர்கள் நேற்று குண்டுவீசி தாக்கியுள்ளனர்.

பலஸ்தீனியர்களை பூண்டோடு அழிக்க இஸ்ரேலிய பிரதமர் பெகின் முயன்று வருவதாக பலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் ஜனாப் யசிர் அரபாத் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இஸ்ரேலியர்களுடன் பலஸ்தீனியர்களும் யுத்தநிறுத்தத்தை மேற்கொள்ளவேண்டுமென்று அமெரிக்க ஜனாதிபதி திரு. றீகன் கேட்டுள்ளார்.

இஸ்ரேலுக்கு 'எப் 16' யுத்த விமானங்களை வழங்குவது பற்றி தமது அதிகாரிகளுடன் ஆராய்ந்துவருவதாகவும் திரு றீகன் தெரிவித்தார்.

இஸ்ரேல் - லெபனான் யுத்தம் தொடர்பாக அமெரிக்காவின் விசேட தூதுவர் திரு. பிலிப் ஹபிவ் மேற்கொண்டுள்ள சமாதான முயற்சி தோல்வியில் முடிந்துள்ளது.

## வவனியா அபிவிருத்தி சபைக் கூட்டம்

[வவனியா]

வவனியா மாவட்ட அபிவிருத்திச் சபையின் முதலாவது கூட்டம் நேற்றுமுன்தினம் வவனியா செயலகத்தில் எளிமையுடனும் நிறைவாகவும் இடம்பெற்றது.

மாவட்டசபை உறுப்பினர்களான திருவாளர்கள் எம். சிற்றம்பலம், வை. சிற்றம்பலம், டாக்டர் செ. பரராஜசிங்கம், எம். பரமநாதன், வவனியா எம். பி திரு. தா. சிவசிதம்பரம், அரசாங்க அதிபர் திரு. ஜி. மூத்தனாயகம், உதவி திட்டமிடல் பணிப்பாளர் திரு ரி. லங்காநேசன், உள்ளூராட்சி ஆணையாளர் திரு. எஸ். கமலநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர். [மாவட்ட அமைச்சர் திரு ஜீ. டி. மஹிந்தசோம கலந்துகொள்ளவில்லை.]

மாவட்ட அபிவிருத்திநிதியம் ஒன்று அமைத்து அதனை மக்கள்வங்கி, இலங்கைவங்கி ஆகியவற்றில் கணக்குவைத்தல்-

செயற்குழுவை எதிர்பாராமல் திட்டமிடுதல் ஆகிய தீர்மானங்கள் இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

1-7-81 முதல் 31-12-81 வரையிலான அரையாண்டுக்கான வரவுசெலவுத்திட்டம் ஒன்றும் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த வரவுசெலவுத்திட்டத்தில் வரவாக 7 லட்சத்து 12 ஆயிரம் ரூபாவும் செலவாக 7 லட்சத்து 82 ஆயிரமும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

# ஈரான் ஜனாதிபதி தேர்தல்: வேட்பாளர் சுடப்பட்டார்!

தெஹ்ரான், ஜுலை 21

ஈரானின் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவிருந்த இஸ்லாமிய குடியரசுக்கட்சி வேட்பாளர் ஒருவர் இனந்தெரியாத மூன்று நபர்களால் சுடப்பட்டு காயமடைந்தார்.

அக்பர் அலி என்ற வேட்பாளரே அவரது வாசஸ்தலத்திற்கு முன்னால்வைத்து சுடப்பட்டவராவார்.

இவரைச் சுட்ட மூவரில் ஒருவரை மெய்ப்பாதுகாவலர் சுட்டுக்கொன்றார், ஏனைய இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஈரானில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரொருவர் இறந்தால், அங்கு தேர்தல் இருவாரங்களுக்கு ஒத்திவைக்கப்பட வேண்டும். ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ஈரானிய பிரதமர் ஜனாப் அலிராஜைக்கு பெருமளவில் ஆதரவுகிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஈரானில் திட்டமிட்டபடி ஜனாதிபதி தேர்தல் நடைபெறுமென அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஈரானின் முன்னாள் ஜனாதிபதி ஜனாப் பானிசதார் பதவியிலிருந்து நீக்கப்பட்ட பின்னர், அங்கு புதிய ஜனாதிபதியைத் தெரிவுசெய்ய தேர்தல் நடைபெறவிருப்பது தெரிந்ததே. (வெ)

## ரமழான் சிந்தனை

களா நோன்பு வைத்துக்கொண்டு ஒருவன் மரணித்து விட்டால் அவனுக்காக அவன் பாதுகாவலர் பிடிக்கலாம் என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(ஆதாரம்—புஹாரி).

ஸஹர் முடிவு: 4-28, நோன்பு திறக்கும் நேரம்: 6-32

— தொகுப்பு: மௌலவியா பௌசியா கரீம்

எம்மிடம்......
உள்ளூர், வெளியூர்

காப்பர் வகைகள் (Floor)
லொறிகளுக்கு
பொடி அடிக்கும்
(F) பிற்றிங்ஸ்........
மெழுகுசீலை வகைகள்

இன்னும் பல பொருட்கள்
நியாய விலையில் கிடைக்கும்.

H. ESMAILJEE & Co.

71-73, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். போன்: 8016

## இங்கிலாந்து கோஷ்டியின் பிரமிக்கத்தக்க வெற்றி!

லண்டன், ஜூலை 21

இங்கிலாந்துக்கும் ஆஸ்திரேலியாவுக்குமிடையே லீட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற 3வது கிரிக்கட் டெஸ்டில் இங்கிலாந்துக்கோஷ்டி பிரமிக்கத்தக்க விதத்தில் வெற்றிஅடைந்துள்ளது.

2வது இன்னிங்ஸில் இங்கிலாந்து வேகப்பந்து வீச்சு வீரர் பொப்வில்லிஸின் அபார பந்து வீச்சைத் தாங்கமுடியாத ஆஸ்திரேலிய வீரர்கள் 111 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். விலிஸ் 43 ஓட்டங்களுக்கு 8 விக்கட்டுகளைக் கைப்பற்றினார்.

இவரது வேகப்பந்து வீச்சும் முன்னாள் இங்கிலாந்து காப்டன் இயன் பொதம் 2வது இன்னிங்ஸில் பெற்ற 142 ஓட்டங்களுமே இங்கிலாந்தின் 18ஓட்ட வெற்றிக்குக் காரணமாக இருந்தன.

ஸ்கோர் விபரம்: ஆஸ்திரேலியா 401, 111 இங்கிலாந்து 174, 356. [இ]

எம்மிடம்......
இறக்குமதிசெய்யப்பட்ட

றெக்சின் குளோத்
பிளாஸ்டிக் குளோத்
(F) போமிக்கா சீற்
பொலித்தீன் வகைகள்
ஒட்டுப்பசை வகைகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெறலாம்.

எச். இஸ்மால்ஜி அன் கோ

71-73, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். போன்: 8016

சுண்டிக்குளம் கொலைவழக்கு:

## "பயங்கரமாக இருந்ததால் தடுக்கமுடியவில்லை"

### மரியதாஸ் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

"நாலு பேரும் ஒருவரைப் போட்டு அடிப்பதை தடுக்க முற்படாதது அவர்கள் பயங்கர ஆயுதங்கள் வைத்திருந்த படியால்தான். எனக்கு பயமாக இருந்தது. அதனால் இட்டப்போகவில்லை. பற்றை மறைவில் பதுங்கியிருந்து பார்த்துக்கொண்டிருந்தேன்"

சுண்டிக்குளம் கொலை வழக்கில் நேற்று சாட்சியமளித்த மரியாம்பிள்ளை மரியதாஸ் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு யாழ். மேல்நீதிமன்றத்தில் நீதிபதி ஜஸ்ரிஸ் எம். ஜாமில் முன்னிலையில் மூன்றாவது தினமாக நடைபெற்றது.

இவ்வழக்கில் சுண்டிக்குளத்தில் 77ம் ஆண்டு மே மாதம் 17ம் தேதி தங்கராசா அல்லது தோமசை கொலைசெய்ததாக, தாமோதரம்பிள்ளை, தா. இரத்தினம், தா. கணபதிப்பிள்ளை அல்லது கந்தையா, த. பூபாலசிங்கம் அல்லது நவரத்தினம் ஆகியோர் மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

1-ம், 2ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி வி. என். நவரத்தினம், சட்டத்தரணி இ. அம்பிகைபாலன், சட்டத்தரணி சத்தியநாதன், சட்டத்தரணி எஸ். சுரேந்திரன் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானர் 3ம் எதிரி சார்பில் சட்டத்தரணி இ. அம்பிகைபாலன், சட்டத்தரணி திருமதி அம்பிகைபாலன் ஆகியோர் ஆஜரானர்கள். 4ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். சிறிசிவாய சட்டத்தரணி செல்வி நளினி நவரத்தினம் ஆஜரானர்கள். அரசதரப்பில் சட்டத்தரணி ஐ. ஞானதாசன் ஆஜரானர்.

மரியாம்பிள்ளை மரியதாஸ் சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது:

"4 பேரும் சண்டைக்குவரும்படி சத்தம் போட்டார்கள். அடிவாங்கியவரை 2ம், 4ம் எதிரிகள் தூக்கிப்பிடித்தனர். கந்தையா சாரத்தை கால்பக்கத்தால் கட்டினார். பின் அவரை இழுத்து தூக்கிப் பின் பக்கமாகக் கொண்டு சென்றனர். அதன்பின் சத்தம் எதுவும் காணப்படவில்லை.

"இறந்துவிட்டார் என்று 1 மணிக்குத் தெரியும். தொழிலுக்குப் போகிறவர்கள் 1 மணிக்கு வந்தார்கள். அவர்களுக்கு நடந்தவற்றைச் சொன்னேன். எல்லோரும் சேர்ந்து பார்ப்போம் என்று போனோம். தொழிலுக்குப் போகிறவர்கள் 'லைட்' கொண்டுபோவார்கள். போய் 'லைட்'டைப் பிடித்துப் பார்த்தோம். அவர் இறந்துவிட்டார். ஒருவர் தொட்டுப் பார்த்தார். உடல் விறைத்திருந்தது. சம்பவத்திற்கு முன் எதிரிகளுக்கும் எங்களுக்குமிடையில் மனஸ்தாபம் இல்லை சம்பவம் என்ன காரணத்திற்கு நடந்ததென அப்போது தெரியாது.

"7ந் தேதி காலை வாடியில் இருந்தேன். 5 மணி வரை சத்தம் கேட்கவில்லை. இராசநாயகம் வாடி, எனது வாடியில் இருந்து 400 யார் தூரத்தில் உள்ளது. அந்த வாடியை எனது வாடியிலிருந்து பார்க்க முடியாது. அங்கு சத்தம் போட்டால் கேட்கமுடியாது"

எதிரிகளின் சட்டத்தரணி வி. என். நவரத்தினம் குறுக்கு விசாரணையில் மரியதாஸ் கூறியதாவது: "சுண்டிக்குளத்திற்கு 75ம் ஆண்டு போனேன். சம்பவத்திற்கு 2 வருடத்தின் முன் போனேன். இறந்தவரை 4 வருட காலமாகத் தெரியும். தொழிலுக்கு வந்த போது தெரியும். அதற்குமுன் அவர் பரந்தனில் ஒரு வீட்டில் இருந்தார்.

சட்: அமிர்தநாதனை எப்ப தெரியும்?-3 மாதமாக.

சட்: டானியலை எப்ப தெரியும்?-3 மாதமாக.

சட்: அமிர்தநாதன் வாடியில் இருப்பது உமக்குத் தெரியுமா?-அவருக்கு வாடி இல்லை.

சட்; அவர் எங்கு இருந்தார்?-பவுண் வாடியில்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. [க]

### தேவை

நல்ல அனுபவமுள்ள டிரைவர் தேவை. நேரடியாக 22, 23, 24ந் திகதிகளில் காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிக்கிடையில் வரவும். ராம்ஸன்ஸ் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ், 19, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். 102

# பஸ் சாரதி படுகொலை! இருவர் கைது!

### எழுதுமட்டுவாளில் சம்பவம்

[சாவகச்சேரி]

ஏழு பிள்ளைகளின் தந்தையான பஸ் சாரதி வெட்டிக் கொலைசெய்யப்பட்ட சம்பவம் எழுதுமட்டுவாளில் நிகழ்ந்துள்ளது. இது சம்பந்தமாக இருவர் கைதுசெய்யப்பட்டனர். மூவரைப் பொலிசார் தேடுகின்றனர்.

எழுதுமட்டுவாளில் சில மாதங்களுக்கு முன்னர் சாதிப் பிரச்னை காரணமாக கைகலப்பு மூண்டு வீடுகளுக்கு தீவைக்கப்பட்டு, பின்னர் இப்பிரச்னை சுமுகமாகத் தீர்த்துவைக்கப்பட்டிருந்தது. இதன் எதிரொலியாகவே இக்கொலைச் சம்பவம் இடம்பெற்றிருப்பதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்களான கந்தன் இராசையாவும், அவரது இரு புதல்வர்களும் தலைமறைவாகி உள்ளனர் என்றும் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை பஸ்டிப்போவைச் சேர்ந்த சாரதியும், எழுதுமட்டுவாள் வாசியுமான வே. சிதம்பரநாதன் [வயது 40-7 பிள்ளைகளின் தந்தை] என்பவர் தலையிலும், உடம்பிலும் வெட்டுக் காயங்களுக்குள்ளாகி, சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மரணமானார். இவருடன் காயமடைந்த கோபாலு என்பவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகின்றார்.

கொலைசெய்யப்பட்ட பஸ் சாரதி சிதம்பரநாதனின் சடலத்தை சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. சி. வி. விக்கினேஸ்வரன் பார்வையிட்ட பின்னர் கொலை நடந்த இடத்துக்கும் சென்று பார்வையிட்டார். சாவகச்சேரி வைத்தியசாலை டாக்டர் எஸ். சண்முகநாதன் பிரேத பரிசோதனை செய்தார்.

சந்தேகநபர்களைக் கைது செய்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி திரு. சி. விக்னேஸ்வரன உத்தரவிட்டார்.

### பொலிசார்—

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கார் பழுதடையவே ஆஸ்பத்திரிக்கு முன்பாக மற்றுமொரு இடத்தில் நின்றுவிட்டதாம். காரை ஒருவர் திருத்திக் கொண்டிருந்தபோது எம் பி காருக்குள் இருந்து பத்திரிகை படித்துக்கொண்டிருந்ததாகவும் கூறப்படுகின்றது.

சிறிது தூரத்தில் இவற்றை அவதானித்துக் கொண்டிருந்த ஆயுதம் தாங்கிய பொலிஸார் அவ்விடத்திற்கு வந்து, காரை அங்கு நிறுத்தக்கூடாதென்றும், உடனடியாகக் காரை எடுக்குமாறும் கூறினராம்.

கார் பழுதடைந்துவிட்டதாகவும், திருத்தியவுடன் காரை எடுப்பதாகவும் எம்.பி. பதில் கூறியதாகவும் கூறப்படுகிறது.

'முடியாது உடனடியாக் காரைஎடுக்கவேண்டும்'' என்று பொலிசார் கட்டாயப்படுத்தியதாக கூறப்படுகிறது.

இதற்கிடையில் அவ்விடத்தில் பெருந்திரளான மக்கள கூடிவிட்டனர் பொலிசாரும் எம். பி.யுடன் வாக்குவாதப்பட்டுக்கொண்டிருந்தனர்.

திரு. யோகேஸ்வரன் யாழ்ப்பாணம் எம். பி. என்று தன்னை அறிமுகம் செய்த போதும் "எம். பி.யெல்லால் எங்களுக்கொன்றுமில்லை" என்று பொலிசார் கூறியதாகக் கூறப்படுகிறது.

எம். பி. மற்றொரு காரில் சென்று இச்சம்பவம்பற்றி பொலிஸ் அதிபருக்கு புகார் செய்ததாகவும், பழுதடைந்த காரை இளைஞர்கள் திருத்தி சென்றார்களென்றும் கூறப்படுகிறது. [க]

### 3 கோடி—

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மதிப்பீடுசெய்யப்பட்டது.

இதன்படி 3 கோடி ரூபா வரை சேதம் ஏற்பட்டதென்றும் அதனை நஷ்ட ஈடாக வழங்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

யாழ். பொதுசன நூலக நஷ்ட மதிப்பீடு ஒன்றரைக் கோடி ரூபா என்றும் இக்குழு மதிப்பீடு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. [யா-வ]

### ஜனாதிபதி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பதி விரும்பாததை அடுத்து ஜனாதிபதிக்கும் தாதிகள் பிரதிநிதிகள் குழுவினருக்குமிடையே நேற்றுமுன்தினம் நடைபெறவிருந்த சந்திப்பு இடம்பெறவில்லை.

தாதிகள் பிரதிநிதிகள் குழுவில் பௌத்தபிக்கு ஒருவர் இடம்பெறுவதையோ அவரைச் சந்திப்பதையோ தாம் விரும்பவில்லையென ஜனாதிபதி தெரிவித்ததையடுத்து தாதிகள் பிரதிநிதிகள் ஜனாதிபதியைச் சந்திக்கவில்லை.

இது இவ்வாறிருக்க தாதிகளின் சகல லீவுகளும் ஓய்வுகளும் ரத்துச்செய்யட்டு ஆஸ்பத்திரிகளில் காவல் போடப்பட்டுள்ளது.

### குண்டு வீச்சு

நாரஹென்பிட்டியிலுள்ள விகாரை ஒன்றில் இடம்பெற்ற தாதிகளின் கூட்டத்தில் கைக்குண்டு வீசியதை அடுத்து பலர் காயமடைந்துள்ளனர் [மா-இ]

### பஸ்ஸில்..,

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பஸ் அரியாலைச் சந்தியில் நின்றபோது மூன்று இளைஞர்கள் ஏறிக்கொண்டதாகவும் அவர்கள் டிக்கட்பெற்றுக் கொண்டபின்னர் ஒருவர் சாரதியை நோக்கி துப்பாக்கியை நீட்டிக்கொண்டிருக்க, மற்ற இருவரும் நடத்துநரிடமிருந்து 490 ரூபாயையும் பறித்தனர் என்றும் பின்னர் மூன்று இளைஞர்களும் பஸ்ஸை நிறுத்தச்செய்து இறங்கி ஓடிவிட்டனராம். [மா]

### வழக்குமுடிந்த

[1ம் பக்கத் தொடர்ச்சி

டத்திலும் இம்முடிவு எடுக்கப்பட்டதாகவும், இதுவே இறுதி முடிவென்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதேசமயம் கூட்டணித் தலைவரும், நல்லூர் எம். பி.யுமான திரு. எம். சிவசிதம்பரம், உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு கிளிநொச்சி இளைஞர் ஞா. அருமைநாயகத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார் [க]

## நன்றி நவிலல்

தெல்லிப்பழை, கட்டுவன் மேற்கைச் சேர்ந்த சீனிவாசகம் சிவலிங்கம் (ஆசிரியர்)

அவர்களின் இறுதிச் சடங்கில் நேரிலும் அனுதாபச் செய்திகள் மூலமும் கலந்து எங்கள் இழப்பில் பங்கு கொண்ட அனைவருக்கும், மலர்வளையங்கள் வைத்து அஞ்சலிசெலுத்திய கட்டுவன்புலம் மகாவித்தியாலய மாணவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். தனித்தனியே நன்றி தெரிவிக்கமுடியாமைக்கு வருந்துகின்றோம்.

சிவலிங்கம் குடும்பத்தினர்
கட்டுவன் மேற்கு,
தெல்லிப்பழை. 0100

## மரண அறிவித்தல்

### திருமதி இராசையா இரத்தினம்

சங்குவேலி வடக்கைச் சேர்ந்த திருமதி இராசையா இரத்தினம் காலமாகிவிட்டார். அன்னார் இராசையா சச்சிதானந்தன் [கல்முனை கட்டிடத்திணைக்களம்] அவர்களின் அன்புத்தாயாரும், கருணாநிதி, மனோகரன் [யாழ்மெற்றல்], கலாமதி, வசிகரன் [நியூஸ் ஏஜென்ட்], பாஸ்கரன் ஆகியோரின் பேத்தியாரும் கமலசேகரம், தெய்வேந்திரன் [மே. ஜெர்மனி], இந்திரன், ஞானம்பிகை, பவளரத்தினம், இராஜேஸ்வரி ஆகியோரின் மாமியாருமாவார்.

தகனக்கிரியைகள் 22-7-81 [இன்று] நண்பகல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் நடைபெறும்.

உறவினர்கள், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ச. வசீகரன், நியூஸ் ஏஜன்ட்.
சங்குவேலி, வடக்கு, மானிப்பாய். 0403

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 803ம் இலக்கத்திலுள்ள கலாநிதி அச்சகத்தில் 1981ம் ஆண்டு ஜூலை மாதம் 22-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Regd No. QB 100886/81, P. O. Box 49. Jaffna. தொலைபேசி 7707, 389, 8126 Registered as a News Paper at the General Post Office SriLanka